# Tnpsc Model Question Paper 11 – General Tamil

Click Here to Download More Tnpsc Tamil Model Questions

1. மரக்கலத்திற்குத் தமிழில் வழங்கும் பெயர்களில் ஒன்று

(அ) வாரணம் (ஆ) பரவை (இ) புணரி **(ஈ) திமில்**

2. கி.மு. பத்தாம் நூற்றாண்டில் எவை தமிழகத்திலிருந்து அரசன் சாலமனுக்கு அனுப்பப்பட்ட பொருள்கள்?

(அ) மிளகும், சந்தனமும் **(ஆ) யானைத் தந்தமும், மயில் தோகையும்**

(இ) முத்தும், துகிலும் (ஈ) கரும்பும், அரிசியும்

3. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயும் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி

(அ) ராணி மங்கம்மாள் (ஆ) அஞ்சலை அம்மாள்

**(இ) வேலு நாச்சியார்** (ஈ) மூவலூர் இராமாமிர்தம்

4. உலகம் உருண்டையானது என்ற அறிவியல் சிந்தனை கொண்ட திருக்குறள்

**(அ) சுழன்றும் ஏர்பின்னது உலகம்** (ஆ) ஆதிபகவன் முதற்றே உலகு

(இ) உலகந் தழீஇயது ஒட்பம் (ஈ) எவ்வதுறைவது உலகம்

5. தமிழ்நாட்டில் முதன்முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகம் எது?

(அ) தேசியக்கொடி (ஆ) தேசபக்தி **(இ) கதரின் வெற்றி** (ஈ) மனோகரன்

6. பொருத்துக:

அ. ஞானக்கண்ணாடி 1. உரைநடை வடிவிலான சமயநூல்

ஆ. வேதவிளக்கம் 2. நகைச்சுவைக் கதை நூல்

இ. தொன்னூல் விளக்கம் 3. சமய நூல்

ஈ. பரமார்த்தகுரு கதை 4. குட்டித் தொல்காப்பியம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 4 | 1 | 3 |
| **ஆ.** | **3** | **1** | **4** | **2** |
| இ. | 1 | 3 | 2 | 4 |
| ஈ. | 4 | 2 | 3 | 1 |

7. மொழி ஞாயிறு என்றழைக்கப்படுபவர்

(அ) தாமோதரனார் **(ஆ) தேவநேயப் பாவாணர்** (இ) இளங்குமரனார் (ஈ) வரதராசனார்

8. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் சிலப்பதிகாரம் பற்றி எழுதிய கட்டுரை?

**(அ) குடிமக்கள் காப்பியம்** (ஆ) தமிழ்க்காதல் (இ) தமிழர் திருமணம் (ஈ) வீரச்சுவை

9. பொருத்துக:

அ. நட்சத்திரக் குழந்தைகள் 1. கல்கி

ஆ. கணையாழியின் கனவு 2. பி.எஸ்.ராமையா

இ. பிரபந்த கானம் 3. ந.பிச்சமூர்த்தி

ஈ. கொலு பொம்மை 4. மௌனி

சரியான விடையைத் தெரிவு செய்க:

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 4 | 1 | 2 |
| ஆ. | 3 | 1 | 4 | 2 |
| **இ.** | **2** | **1** | **4** | **3** |
| ஈ. | 2 | 3 | 4 | 1 |



winmeen.com

10. மோகனா என்னும் பாலசரஸ்வதி பரதநாட்டியத்திற்காக எந்த வயதில் காஞ்சிபுரத்தில் மேடை ஏறினார்?
(அ) 10 வயதில் **(ஆ) 7 வயதில்** (இ) 12 வயதில் (ஈ) 16 வயதில்

11. நாடகக்கலையை மீட்டெடுப்பதே தனது குறிக்கோள் என்று கூறியவர்
(அ) கந்தசாமி **(ஆ) ந.முத்துசாமி** (இ) வேலுச்சாமி (ஈ) அழகர்சாமி

12. "காந்திமகான் கதை" எனும் இசை நூலின் ஆசிரியர்
(அ) வேழ வேந்தன் (ஆ) பெ.தூரன் **(இ) கொத்த மங்கலம் சுப்பு** (ஈ) தமிழழகன்

13. பாரதிதாசன் "குடும்பவிளக்கு" என்னும் நூலின் எப்பகுதியில் "விருந்தோம்பல்" எனும் தலைப்பில் கவிதை படைத்துள்ளார்?
(அ) ஐந்தாம் பகுதி (ஆ) முதல் பகுதி (இ) நான்காம் பகுதி **(ஈ) இரண்டாம் பகுதி**

14. தண்டமிழ் ஆசான் என யார்? யாரைப் பாராட்டினார்?
(அ) கம்பர் – சடகோபரை.
**(ஆ) இளங்கோவடிகள் – சீத்தலைச் சாத்தனாரை.**
(இ) சீத்தலைச் சாத்தனார் – இளங்கோவடிகளை.
(ஈ) பாரதியார் – கம்பரை.

15. "இஸ்லாமிக் கம்பர்" எனப் போற்றப்படுபவர்
(அ) அப்துல் மரைக்காயர் (ஆ) முகமதுலெப்பை (இ) கடிகை முத்துப் புலவர் **(ஈ) உமறுப்புலவர்**

16. எட்டுத் தொகை நூல்களில் "ஓங்கு" என்னும் அடைமொழி பெற்ற நூல்
(அ) குறந்தொகை (ஆ) கலித்தொகை (இ) நற்றிணை **(ஈ) பரிபாடல்**

17. இரட்டுற மொழிதல் என்பது
(அ) ஒரு சொல் பல பொருட்களைத் தருதல் **(ஆ) ஒரு சொல் இரண்டு பொருள்பட அமைந்து வருதல்**
(இ) பல சொற்கள் ஒரு பொருள் தருதல் (ஈ) ஒரே சொல் மீண்டும் மீண்டும் பல முறை வருதல்

18. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை பெயரில் பல்கலைக்கழகம் அமைந்துள்ள மாவட்டம் எது?
(அ) கன்னியாகுமரி **(ஆ) திருநெல்வேலி** (இ) திருச்சி (ஈ) கோவை

19. மடந்தை பருவத்தின் வயது
(அ) 8–11 (ஆ) 12–13 **(இ) 14–19** (ஈ) 20–25

20. கலம்பக உறுப்புகள்
(அ) ஆறு (ஆ) எட்டு **(இ) பதினெட்டு** (ஈ) பன்னிரெண்டு

21. பொருந்தாத இணையைத் தெரிவு செய்க:
**(அ) பாசவர் – நெற்பவர்**
(ஆ) ஓசுநர் – எண்ணெய் விற்பவர்
(இ) கண்ணுள் வினைஞர் – ஓவியர்
(ஈ) மண்ணீட்டாளர் – சிற்பி

22. கூற்று 1: கம்பர் பிறந்த தேரழுந்தூர் சோழநாட்டில் அமைந்துள்ளது
கூற்று 2: கம்பர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தப் புலவர்
(அ) கூற்று 1 மட்டும் சரி (ஆ) கூற்று 2 மட்டும் சரி
**(இ) கூற்று இரண்டும் சரி** (ஈ) கூற்றும் இரண்டும் தவறு

23. கூலவாணிகம் செய்தவர்

(அ) பரணர் (ஆ) இளங்கோவடிகள் (இ) கம்பர் **(ஈ) சீத்தலைச்சாத்தனார்**

24. அகநானூற்றில் பாலைத்திணைப் பாடல்கள் எவ்வாறு தொகுக்கப்பட்டுள்ளன?
(அ) 2, 8, 12, 18, 22 ... (இரண்டு. எட்டாக) (ஆ) 6, 16, 26, 36, 46... (ஆறு, ஆறாக)
**(இ) 1, 3, 5, 7, 9... (ஒற்றைப்படை எண்களாக)** (ஈ) 4, 14, 24, 34, 44... (நான்கு, நான்காக)

25. "அறுவர்க் கிளைய நங்கை" இறைவனை ஆடல் கண்டருளிய நங்கை எனப்படுபவள் யார்?
(அ) மாரியம்மன் (ஆ) துர்க்கை (இ) திருமகள் **(ஈ) பிடாரி**

26. கீழ்க்கண்ட நூல்களுள் எட்டுத்தொகை நூல்
(அ) நான்மணிக்கடிகை (ஆ) இன்னாநாற்பது **(இ) கலித்தொகை** (ஈ) நாலடியார்

27. "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" என்னும் தொடரில் "நூல்" என்பது எந்த நூலைக் குறிக்கிறது?
(அ) நான்மணிக்கடிகை **(ஆ) நாலடியார்** (இ) களவழி நாற்பது (ஈ) கார் நாற்பது

28. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நீதியை வலியுறுத்தும் நூல்களின் எண்ணிக்கை
**(அ) 11** (ஆ) 10 (இ) 6 (ஈ) 9

29. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை எத்தனை?
(அ) 70 **(ஆ) 38** (இ) 25 (ஈ) 36

30. "மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து"
... மேற்கண்ட பாடலடிகளில் அமைந்துள்ள மோனைச் சொற்களைக் கண்டறிக
**(அ) மனிதரெலாம், மனோபாவம்** (ஆ) வானைப்போல் விரிவடைந்து
(இ) மனிதரெலாம், அன்புநெறி (ஈ) மனோபாவம் வானைப்போல்

31. வஞ்சகன் <u>**முதலைக் கண்ணீர்**</u> வடித்தான்
– இந்த உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருள் யாது?
(அ) மெய்யழுகை–உண்மையான அழுகை
(ஆ) எண்ணித் துணியாதார்–நல்லவன் வடிக்கும் கண்ணீர்
**(இ) பொய்யழுகை, பொய்யான நட்பு, தீமை தரக்கூடிய கண்ணீர்**
(ஈ) பொய்யில்லாத அழுகை

32. கீழ்க்கண்ட உவமைக்கு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:
"உடலும் உயிரும் போல"
(அ) ஒற்றுமையின்மை (ஆ) மகிழ்ச்சி (இ) வெளிப்படைத்தன்மை **(ஈ) ஒற்றுமை**

33. பிறவினை வாக்கியத்தைக் கண்டறிக
(அ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் (ஆ) நிலவன் புத்தகத்தைப் படித்தார்
(இ) நிலவன் பாடம் நடத்தினார் **(ஈ) நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தார்**

34. விடைக்கேற்ற வினா எது?
கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும்
குடக்கூத்து என்றும் கூறுவர்
(அ) கரகாட்டம் என்றால் என்ன? **(ஆ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**
(இ) கரகாட்டம் எப்போது நடைபெறும் (ஈ) கரகாட்டத்தினைப் போன்ற வேறு கலைகள் யாவை?

35. ஐம்பெருங்குழு, எண்பேராயம்–சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
(அ) திசைச் சொற்கள் (ஆ) வட சொற்கள் (இ) உரிச்சொற்கள் **(ஈ) தொகைச் சொற்கள்**

winmeen.com

36. கீழ்க்கண்டவற்றுள் வினையெச்சம் அல்லாத ஒன்றைக் கண்டறிக:
(அ) வெந்து **(ஆ) மூடுபனி** (இ) வெம்பி (ஈ) எய்தி

37. நாற்காலி என்பது எவ்வகைப் பெயர் என கண்டறிக:
**(அ) பொருட்பெயர்** (ஆ) சினைப்பெயர் (இ) காலப்பெயர் (ஈ) பண்புப்பெயர்

38. "வா" என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்க
**(அ) வந்தவர்** (ஆ) வந்து (இ) வந்த (ஈ) வந்தான்

39. "ஓடு" என்ற வேர்ச்சொல்லின் தொழிற்பெயரை கண்டறிந்து எழுதுக:
(அ) ஓடுக **(ஆ) ஓடுதல்** (இ) ஓடிய (ஈ) ஓடிந்து

40. "நொந்தான்" சொல்லின் வேர்ச்சொல் யாது?
**(அ) நொ** (ஆ) நொந்த (இ) நொந்து (ஈ) நோதல்

41. சரியான வேர்ச்சொல்லைக் காண்க:
"கொண்டிலன்"
(அ) கொண்ட **(ஆ) கொள்** (இ) கொண்டனன் (ஈ) கொண்டு

42. தே–ஓரெழுத்து ஒரு மொழிக்கு உரிய பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
**(அ) கடவுள்** (ஆ) தலைவன் (இ) அரசன் (ஈ) கள்வன்

43. இளமைப்பெயர் மரபுபிழை நீக்கியது.
"யானை"
(அ) குஞ்சு (ஆ) பிள்ளை (இ) குட்டி **(ஈ) கன்று**

44. மரபுப்பிழை நீக்கி எழுதுக:
இல்லத்தின் அருகே புதிதாகக் **<u>கூரை போட்டனர்</u>**
(அ) கூரைமூடினர் **(ஆ) கூரை வேய்ந்தனர்**
(இ) கூரை அமைத்தனர் (ஈ) கூரை இட்டனர்

45. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
(அ) அமுதமொழி **(ஆ) அடி மலர்** (இ) பூ விரல் (ஈ) முத்துப்பல்

46. பொருந்த மரபுச் சொல்லைக் கண்டறிக:
(அ) வாழைக்கச்சல் (ஆ) முருங்கைச்சரடு (இ) மாவடு **(ஈ) பாலமூசு**

47.அழுக்காறுடையான் – எதிர்ச்சொல் தருக:
(அ) பொறமை உடையவன் (ஆ) தூய்மை உடையவன்
**(இ) பொறாமையற்றவன்** (ஈ) தூய்மை அற்றவன்

48. "உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே"
– இந்நூற்பா இடம் பெற்ற இலக்கண நூல்
(அ) நன்னூல் (ஆ) அகத்தியம் **(இ) தொல்காப்பியம்** (ஈ) இலக்கண விளக்கம்

49. பொருத்துக:

| திணை | தெய்வம் |
|---|---|
| அ. குறிஞ்சி | 1. வருணன் |
| ஆ. முல்லை | 2. இந்திரன் |
| இ. மருதம் | 3. திருமால் |

ஈ. நெய்தல் 4. முருகன்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **3** | **2** | **1** |
| ஆ. | 1 | 2 | 3 | 4 |
| இ. | 2 | 1 | 4 | 3 |
| ஈ. | 2 | 3 | 4 | 1 |

50. தம் வீரர்களுடன் பேர்க்களத்தில் போரிடும் போது சூடும் பூ எதுவென அறிக:
(அ) உழிஞை பூ (ஆ) வஞ்சிப்பூ **(இ) தும்பைப் பூ** (ஈ) நொச்சிப்பூ

51. இந்திய நூலகவியலின் தந்தை எனப்போற்றப்படுபவர்
(அ) டாக்டர்.அம்பேத்கர் (ஆ) தேவ நேய பாவாணர்
**(இ) முனைவர்.இரா.அரங்கநாதன்** (ஈ) இரா.பி.சேதுப்பிள்ளை

52. இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு பிரதி எங்கு பாதுகாக்கப்படுகிறது?
(அ) நடுவண நூலகம் **(ஆ) கன்னிமாரா நூலகம்** (இ) தேசிய நூலகம் (ஈ) ஆவணக் காப்பகம்

53. தெயவமணிமாலை திருவருட்பாவில் எத்தனையாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது?
(அ) மூன்றாம் திருமுறை **(ஆ) ஐந்தாம் திருமுறை**
(இ) ஆறாம் திருமுறை (ஈ) நான்காம் திருமுறை

54. "ஏழைகளின் கற்பக விருட்சம்" என்று அழைக்கப்படும் மரம்
(அ) மாமரம் (ஆ) பலாமரம் (இ) தென்னை மரம் **(ஈ) பனைமரம்**

55. உலகளாவிய தமிழர்கள் தம் வருவாயை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் தமிழை வளர்க்கும் செயல்களில் ஈடுபட்டு வருவது எதை காட்டுகிறது?
**(அ) மொழிப்பற்றை** (ஆ) தேசப்பற்றை (இ) மதப்பற்றை (ஈ) சமயப்பற்றை

56. உடல் உறுதியாய் இருப்பதற்கு வாதம், பித்தம், சீதம் இம்மூன்றின் -------- காரணமாகும்
**(அ) சமநிலை** (ஆ) வேறுபாடு (இ) ஓட்டம் (ஈ) இயக்கம்

57. கால்நடைகளுக்கு ஊறு நேரா வண்ணம் வேலி கட்டிப் பாதுகாத்த இடங்களில் அமைந்த ஊர்கள் எவ்வாறு அழைக்கப்பெற்றன?
(அ) பாக்கம் **(ஆ) பட்டி** (இ) குறிச்சி (ஈ) கரடு

58. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும் என்று கூறியவர்
(அ) அறிஞர் அண்ணா **(ஆ) அண்ணல் அம்பேத்கர்** (இ) தந்தை பெரியார் (ஈ) மகாத்மா காந்தி

59. "தமிழ் தாத்தா" என அழைக்கப்படுபவர் யார்?
**(அ) உ.வே.சாமிநாதர்** (ஆ) பாரதியார்
(இ) கவிமணி தேசிய விநாயகம் (ஈ) நாமக்கல் கவிஞர்

60. இந்தியாவில் முதன் முதலாகத் தொழிலாளர் சங்கத்தைச் சென்னையில் துவக்கியவர்
(அ) மறைமலை அடிகள் **(ஆ) திரு.வி.கல்யாண சுந்தரனார்**
(இ) வையாபுரி (ஈ) ந.மு.வேங்கடசாமி

61. இதழ்களைக் குவிப்பதனால் பிறக்கும் எழுத்துக்கள்
(அ) (அ, ஆ, இ, ஈ) **(ஆ) (உ, ஊ, ஒ, ஓ, ஔ)** (இ) (எ, ஏ, ஐ, அ) (ஈ) (அ, எ, ஏ, ஈ)

62. "தட்சிணசித்திரம்" என்ற நூலுக்கு உரை எழுதியவர்

(அ) கருணாகரத் தொண்டைமான் **(ஆ) மகேந்திரவர்மன்**
(இ) இராசராசன் (ஈ) குலேசேகர பாண்டியன்

63. தமிழ் "நாடகத் தந்தை" எனப் போற்றப்படுபவர்
(அ) தி.க.சண்முகனார் **(ஆ) பம்மல் சம்பந்தனார்**
(இ) சங்கரதாசு சுவாமிகள் (ஈ) டி.எஸ்.இராசமாணிக்கம்

64. "மரபுக் கவிகையின் வேர் பார்த்தவர் புதுக்கவிதையில் மலர் பார்த்தவர்" என்று பாராட்டப்படும் கவிஞர்
(அ) சுரதா (ஆ) வாணிதாசன் (இ) முடியரசன் **(ஈ) அப்துல் ரகுமான்**

65. பாரதிக்குப் பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவை யாருடைய படைப்புகள்?
(அ) பாரதிதாசன் கவிதைகள் (ஆ) சுரதாவின் கவிதைகள்
**(இ) ந.பிச்சமூர்த்தி கவிதைகள்** (ஈ) கண்ணதாசன் கவிதைகள்

66. "சேரமான் காதலி" எனும் புதினத்திற்காக சாகித்திய அகாடமி விருதுபெற்ற திரைப்படக் கவிஞர் யார்?
**(அ) கண்ணதாசன்** (ஆ) மு.மேத்தா (ஈ) நா.காமராசன் (ஈ) நா.முத்துக்குமார்

67. பாரதிதாசன் எழுதிய பிசிராந்தையார் என்னும் நாடக நூலுக்குக் கொடுக்கப்பட்ட விருது
**(அ) சாகித்திய அகாடமி விருது** (ஆ) குடியரசுத்தலைவர் விருது
(இ) சோவியத் நாட்டு விருது (ஈ) தாமரைத் திரு விருது

68. "கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொல் கேட்கக் கடன் அன்று"
–எனப்பாடியவர் யார்?
(அ) ஔவையார் **(ஆ) திருமூலர்** (இ) சுந்தரர் (ஈ) பாரதியார்

69. கல் மனத்தையும் கரையச் செய்யும் பக்திப் பாடல்களின் தொகுப்பு எனப் புகழப்படும் நூல் எது?
(அ) போற்றித் திருவகவல் **(ஆ) இரட்சணியயாத்திரிகம்**
(இ) இரட்சணிய மனோகரம் (ஈ) இரட்சணியக்குறள்

70. களைப்பு நீங்க வேலை செய்வோர் பாடுவது
(அ) குத்துப்பாடல் **(ஆ) தொழில் பாடல்** (இ) வரிப்பாடல் (ஈ) தனிப்பாடல்

71. "எவரே
புண்படா துலகிற் புகழுடம் படைந்தார்"
– பாடலடிகள் இடம்பெறும் நூல்
(அ) பாஞ்சாலிசபதம் **(ஆ) மனோன்மணீயம்** (இ) கலிங்கத்துப்பரணி (ஈ) புறநானூறு

72. கலம்பகம் ---------- வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று
(அ) பதினெட்டு **(ஆ) தொண்ணூற்றாறு** (இ) பத்து (ஈ) எட்டு

73. திருவிளையாடல் புராணத்தில் உள்ள காண்டங்கள்
(அ) 5 **(ஆ) 3** (இ) 7 (ஈ) 6

74. சீறாப்புரணத்தில் உள்ள மொத்த விருத்தப்பாக்களின் எண்ணிக்கை
**(அ) 5027** (ஆ) 5029 (இ) 5023 (ஈ) 5025

75. "இஸ்மத் சன்னியாசி" என்னும் பாரசீகச் சொல்லுக்குரிய பொருள்
(அ) வன்துறவி (ஆ) சமணத்துறவி (இ) தவத்துறவி **(ஈ) தூயதுறவி**

76. "பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்

அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை"
– இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல்
(அ) பரிபாடல் **(ஆ) கலித்தொகை** (இ) நற்றிணை (ஈ) குறுந்தொகை

77. மலைபடுகடாம் நூலின் பாட்டுடைத்தலைவன்
(அ) பெருங்கௌசிகனார் **(ஆ) நன்னன்** (இ) பாரி (ஈ) பாணர்

78. "கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்" என்று பெருமைப்படும் கவிஞர் யார்?
**(அ) பாரதியார்** (ஆ) பாரதிதாசன் (இ) கண்ணதாசன் (ஈ) கம்பதாசன்

79. "கம்பராமயணத்தில் துன்புள தெனின் அன்றோ சுகமுளது" – எனக்கூறுபவர் யார்?
(அ) குகன் **(ஆ) இராமன்** (இ) அனுமன் (ஈ) சீதை

80. கீழ்காணும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் "உத்திரவேதம்" என அழைக்கப்படும் நூல்
(அ) திரிகடுகம் (ஆ) இனியவை நாற்பது (இ) திருக்குறள் (ஈ) முதுமொழிக்காஞ்சி

81. அரியவற்றுள் எல்லாம் அரிதே,
-------- பேணித் தமராக் கொளல்
(அ) சிறியவரைப் **(ஆ) பெரியாரைப்** (இ) உறவினரை (ஈ) நண்பனை

82. தட்டிப் போட்ட ரொட்டிக்குப் புரட்டிப் போட ஆளு இல்லாம – இப்பழமொழியின் பொருள்
(அ) ஆள் பற்றாக்குறை (ஆ) உண்பவர்கள் பலர்
**(இ) நேரமின்றி உழைப்பது** (ஈ) ரொட்டி பற்றாக்குறை

83. பழமொழிகள்:
"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
– இப்பழமொழி அமைந்த சரியான தொடரைத் தேர்ந்தெடு.
**(அ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்து நோயற்ற வாழ்வு வாழ்வோம்**
(ஆ) நோயற்ற வாழ்வு வாழ்வோம் குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்து
(இ) குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்து நோயற்ற வாழ்வு வாழ்வோம்
(ஈ) நோயற்ற வாழ்வே குறைந்த செல்வம் என்பதை உணர்ந்த நோயுற்ற வாழ்வு வாழ்வோம்

84. "தன்வினை" வாக்கியம் எது?
**(அ) செங்குட்டுவன் தங்கம் வாங்கினான்** (ஆ) நான் பொய் பேசேன்
(இ) நீ நன்றாகப் படி (ஈ) பொன்னி இன்னிசை பாட்டுவித்தாள்

85. தமிழ்ப் பாடத்தை முறையாகப் படி
– இத்தொடர் எவ்வகை வாக்கியம் என கண்டறிக:
**(அ) கட்டளை வாக்கியம்** (ஆ) செய்தி வாக்கியம் (இ) தனி வாக்கியம் (ஈ) உணர்ச்சி வாக்கியம்

86. போட்டியில் நான் முதற்பரிசு பெற்றிருப்பதாக ஆசிரியர் கூறினார்
– எவ்வகை வாக்கியம் கூறு?
(அ) தனி வாக்கியம் (ஆ) தொடர் வாக்கியம்
(இ) நேர்க்கூற்று வாக்கியம் (ஈ) அயற்கூற்று வாக்கியம்

87. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்:
தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு ஏறு தழுவுதல்
**(அ) தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு எது?**
(ஆ) தொன்மையான வீரவிளையாட்டு ஏறு தழுவுதலா?
(இ) ஏறுதழுவுதல் எம்மக்களின் வீர விளையாட்டு?
(ஈ) தொன்மையான தமிழர்களின் வீரவிளையாட்டு எது?

88. சரியான சொற்றொடரினைக் கண்டறிக:
(அ) பொதுமக்கள் எரித்தனர் தீயிட்டு அந்நியத்துணிகளை
(ஆ) எரித்தனர் அந்நியத்துணிகளை தீயிட்டு பொதுமக்கள்
(இ) தீயிட்டு எரித்தனர் பொதுமக்கள் அந்நியத்துணிகளை
**(ஈ) பொதுமக்கள் அந்நியத்துணிகளைத் தீயிட்டு எரித்தனர்**

89. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குக:
(அ) உயிரெழுத்துகள் பிறக்கின்றன பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு
(ஆ) பிறக்கின்றன பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு உயிரெழுத்துகள்
(இ) கழுத்தை இடமாகக் கொண்டு பன்னிரண்டும் உயிரெழுத்துகள் பிறக்கின்றன
**(ஈ) உயிரெழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன**

90. பல்லாண்டு, முத்து, ஆமணக்கு, கொம்பு அரசன்
– அகர வரிசைப்படுத்தி எழுதுக:
**(அ) அரசன், ஆமணக்கு, கொம்பு, பல்லாண்டு, முத்து** (ஆ) முத்து, பல்லாண்டு, ஆமணக்கு, கொம்பு, அரசன்
(இ) ஆமணக்கு, அரசன், கொம்பு, பல்லாண்டு, முத்து (ஈ) கொம்பு, முத்து, ஆமணக்கு, அரசன், பல்லாண்டு

91. அகர வரிசைப்படுத்தி எழுதுக:
(அ) சுற்றம், சிந்தனை, செய்யுள், சேரலாதன், சோம்பல்
(ஆ) சிந்தனை, சேரலாதன், சோம்பல், செய்யுள், சுற்றம்
**(இ) சிந்தனை, சுற்றம், செய்யுள், சேரலாதன், சோம்பல்**
(ஈ) செய்யுள், சுற்றம், சிந்தனை, சேரலாதன், சோம்பல்

92. "ஏ" என்னும் ஓரெழுத்து ஒருமொழி
(அ) ஏடு (ஆ) ஏறுதல் **(இ) அம்பு** (ஈ) அடுப்பு

93. ஒலிப்பு முறைமை அறிந்து சரியான பொருள் எழுதுக:
"ஊண்" என்றால் --------; ஊன் என்றால் --------
**(அ) உணவு, இறைச்சி** (ஆ) இறைச்சி, உணவு
(இ) ஊனம், ஊஞ்சல் (ஈ) உள்ளம், உணவு

94. "உளை" என்பதன் பொருள்
(அ) பக்கம் **(ஆ) பிடரி மயிர்** (இ) அடுப்பு (ஈ) உதவு

95. "ஆஸ்பிடல்" என்ற சொல்லிற்கு நேரான தமிழ்ச்சொல்
(அ) மருந்தகம் **(ஆ) மருத்துவமனை** (இ) மருத்துவ நிலையம் (ஈ) சுகாதார நிலையம்

96. Rational: என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க:
**(அ) பகுத்தறிவு** (ஆ) எழுத்தறிவு (இ) பட்டறிவு (ஈ) மெய்யறிவு

97. "**இடர்** உற மறையோரும் எரியுறு மெழுகானார்"
எனவரும் பாடலில் "இடர்" – என்பதின் எதிர்ச்சொல்
(அ) துன்பம் **(ஆ) இன்பம்** (இ) மேன்மை (ஈ) மாதவர்

98. பிரித்து எழுதுக:
பாசிலை
**(அ) பசுமை + இலை** (ஆ) பாசு + இலை (இ) பாசி + இலை (ஈ) பைசு +இலை

99. பைங்கூழ்
– பிரித்தெழுதுக:

(அ) பசிய + கூழ் (ஆ) பைம் + கூழ் (இ) பை + கூழ் **(ஈ) பசுமை + கூழ்**

100. புதுக்கவிதையின் தந்தை என போற்றப்படுபவர்
**(அ) ந.பிச்சமூர்த்தி** (ஆ) பாரதிதாசன் (இ) கண்ணதாசன் (ஈ) வைரமுத்து

winmeen.com